# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2015.01.22

**ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் :01/2015**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**வருகைதரு விரிவுரையாளர்களுக்கான கட்டணம் மற்றும் போக்குவரத்துச் செலவு**

2003.12.29 ஆம் திகதிய 837 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை, 2013.04.24 ஆம் திகதிய 07/2013 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை, 2012.04.16 ஆம் திகதிய 07/2012 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கை மற்றும் 2013.05.17 ஆம் திகதிய 07/2013 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கை, 2014.02.10 ஆம் திகதிய UGC/HR/6/1/13(I) ஆம் இலக்கக் கடிதம் மற்றும் 2009.06.03 ஆம் திகதிய UGC/IUA/2/PGS/6 ஆம் இலக்கக் கடிதம் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. 888 ஆவது ஆணைக்குழுக் கூட்டத்தின்போது பல்கலைக்கழகங்களில் வருகைதரு விரிவுரையாளர்களுக்கான கட்டணங்களை கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் திருத்தியமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

| | | | | திருத்தியமைக்கப்பட்ட கட்டண அளவுகள் (ஒரு மணித்தியாலத்திற்கு) (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | முதுமாணிப் பட்டப் பாடநெறிகள் | விரிவுரைகள் | | பல்கலைக்கழக கட்டுப்பாட்டு சபையினால் கட்டண அளவுகளைத் தீர்மானிக்க முடியும் * |
| | | செயன்முறை | | |
| 2. | இளமாணிப் பட்டப் பாடநெறிகள் | விரிவுரைகள் | | 1500/- |
| | | செயன்முறை | | 600/- |
| 3. | இளமாணிப் பட்ட மட்டத்திற்கு முன்னர் நடாத்தப்படும் பாடநெறிகள் | விரிவுரைகள் | | 900/- |
| | | செயன்முறை | | 450/- |
| 4. | ஆலோசகருக்காக | ஆங்கிலம் | மணித்தியால அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளவர்களுக்கு | 750/- |
| | | | துரித ஆங்கிலப் பாடநெறிக்காக ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளவர்களுக்கு | 18000/- (மாதாந்தம்) - வாரத்திற்கு குறைந்தது 25 மணித்தியாலங்கள் என்ற நிபந்தனையின் கீழ் |
| | | ஆங்கிலம் தவிர்ந்த ஏனையவை | | 750/- |

* பல்கலைக்கழகத்தினால் பணம் அறவிடப்பட்டு நடாத்தப்படும் முதுமாணிப் பட்டப் பாடநெறிகளுக்கான ஒரு மணி நேர விரிவுரை அல்லது செயன்முறைக்காக குறைந்த தொகை ரூ.1000/- என்ற நிபந்தனையின் கீழ் பல்கலைக்கழக கட்டுப்பாட்டு சபையினால் தீர்மானிக்கப்படும் கட்டண அளவுகளின் பிரகாரம் செலுத்த முடியும். பல்கலைக்கழகத்தினால் ஈட்டப்படும் நிதியின் மூலம் இந்தச் செலுத்துகைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

3. இது தவிர தற்போது அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள போக்குவரத்துக் கொடுப்பனவும் செலுத்தப்படும்.

4. மேலும், 2014.12.18 ஆம் திகதி நடைபெற்ற 908 ஆவது ஆணைக்குழுக் கூட்டத்தின்போது பல்கலைக்கழகங்களில் விசேட துறைகளின் சேவைக்காக தேவைப்படும்போது தொலைத்தொடர்பு உரையாடல்கள் (Teleconference) மற்றும் ஸ்கைப் தொழில்நுட்பத்தின் (Skype) ஊடாக சேவையைப் பெற்றுக்கொள்ளும் வெளிநாட்டு நிபுணர்களுக்கு ஒரு மணித்தியாலத்திற்கு 50 அமெரிக்க டொலர்களை விடக் குறையாத மற்றும் 100 அமெரிக்க டொலர்களை விட அதிகரிக்காத கட்டணத்தைச் செலுத்த முடியும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

5. வருகைதரு விரிவுரையாளர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது திறைசேரி விதித்திருக்கும் கீழ் குறிப்பிடப்படும் அனைத்து நிபந்தனைகளையும் திருப்திகரமான முறையில் பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உயர்கல்வி நிறுவகங்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

அ) எந்தவொரு நடைமுறையின் கீழும் வருகைதரு விரிவுரையாளர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு குறிப்பிட்ட உயர்கல்வி நிறுவனத்தில் அதற்கான வசதிகள் மற்றும் தேவை நிலவ வேண்டும்.

ஆ) உயர்கல்வி நிறுவகங்கள் வருகைதரு விரிவுரையாளர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு முன்னர் இளமாணிப் பட்டப் பாடநெறிகள் மற்றும் முதுமாணிப் பட்டப் பாடநெறிகளில் அனைத்து விரிவுரையாளர்களையும் பூரணமாக சேவையில் ஈடுபடுத்தியிருத்தல் வேண்டும்.

இ) இது தொடர்பான மேலதிக நிதிக்கான வேண்டுகோள்கள் சம்பந்தமாக கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

6. 2003.12.29 ஆம் திகதிய 837 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை, 2013.04.24 ஆம் திகதிய 07/2013 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை, 2012.04.16 ஆம் திகதிய 07/2012 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கை, 2013.05.14 ஆம் திகதிய 07/2013 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கை, 2014.02.10 ஆம் திகதிய UGC/HR/6/1/13(I) ஆம் இலக்கக் கடிதம் மற்றும் 2009.06.03 ஆம் திகதிய UGC/IUA/2/PGS/6 ஆம் இலக்கக் கடிதம் என்பன இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

7. தயவுசெய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**ஒப்பம்: பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம**
தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர் கல்வி அமைச்சு
2. தலைவர்,பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)

10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் /சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள்/உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. தொழிற்சங்களின் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/1/13(I)